بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) ஹாலாந்திலுள்ள மஸ்ஜிது நூரில் 09.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 09 October 2015 (Tamil)**

**தன்னை அஹ்மதிய்யத்துடன் தொடர்புபடுத்துகின்ற ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பு வைப்பதும், அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நன்றியுள்ள, கட்டுப்படுகின்ற தொடர்பை வைப்பதும் அவர் மீது கடமையாகும். ஏனெனில் அவர் பைஅத் செய்யும்போது இந்த உறுதிமொழியைத்தான் செய்தார். கிலாஃபத்திடமிருந்து கிடைக்கின்ற வழிகாட்டல்கள், கட்டளைகள், கொடுக்கின்ற நிகழ்ச்சிகள் ஆகியவற்றின்படி செயல்பட்டுத்தான் இந்த உறுதிமொழியை அவர் நிறைவேற்ற முடியும்.**

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இங்கு (ஹாலாந்தில்) உள்ள பெரும்பான்மையினர் பிறப்பு அஹ்மதிகளாவர்; அல்லது அவர்களின் குழந்தைப் பருவத்தில் அஹ்மதிய்யத் வந்தது; அவர்கள் அஹ்மதிய்யத்தின் சூழலில் வளர்ந்தனர். அவர்களிலும் பெரும்பான்மையினர் பாகிஸ்தானியர்களாவர். அவர்களுக்கு இந்த (ஹாலாந்து) நாட்டில் வாழ்வதற்கு, இங்குள்ள குடிமக்களாகுவதற்கு ஏன் அனுமதி அளிக்கப்பட்டதென்றால், நீங்கள் இங்கு வந்து, பாகிஸ்தானில் உங்களுக்கு சுதந்திரமான முறையில் உங்கள் மார்க்கத்திற்கேற்ப, இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப வெளிப்படுத்துவதற்கும், செயல்படுவதற்கும் அனுமதி இருந்ததில்லை; அனுமதி இல்லை என வெளிப்படுத்தினீர்கள்: (பாகிஸ்தான் அஹ்மதிகளாகிய அவர்களில்) சிலர் மீது வழக்குகளும் தொடுக்கப்பட்டிருக்கலாம். எனவே **இந்த பெரும்பான்மையினர் இங்கு வாழ்வதற்கான அனுமதி அல்லது இங்குள்ள அரசாங்கத்தின் பரிவு, நீங்கள் உங்களை அஹ்மதிகள் என்று கூறுகிறீர்கள் என்ற காரணத்தினால் ஆகும். எனவே அஹ்மதிகள் என்ற இந்த அறிவிப்பு உங்கள் மீது சில பொறுப்புகளையும் சுமத்துகின்றன.** மேலும் எவர்கள் தமது கல்வி அல்லது வேறு ஏதாவது திறமையின் காரணமாக இந்த நாட்டிற்கு வந்தார்களோ தமது கல்வித்திறனை மேலும் அதிகமாக்க வாய்ப்பு கிடைத்ததோ, மேலும் தம்மை அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டவர்களாகக் குறிப்பிடுகின்றார்களோ அந்த அஹ்மதிகளும் இந்தப் பொறுப்பிலிருந்து வெளியே விலகியிருக்கவில்லை. அவ்வாறே புதிதாக பைஅத் செய்தவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தின் மீது நம்பிக்கை இருப்பதனால் அவர்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர். பைஅத்திற்குப் பிறகு பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றும் இந்தப் பொறுப்பு அவர்கள் மீதும் வந்து விடுகிறது. **நாங்கள் பிறப்பு அஹ்மதிகளை அல்லது பழைய அஹ்மதிகளை எவ்வாறு செயல்படக் கண்டோமோ அவ்வாறு செயல்பட்டோம் என அவர்கள் கூறுவதால் அல்லாஹ் அவர்களையும் பொறுப்பிலிருந்து விலக்கி விடமாட்டான்.**

இக்காலத்தில் நமது தர்பிய்யத்திற்கு திருக்குர்ஆன், சுன்னத் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரைகள், விளக்கங்கள், எழுத்துக்களைப் புரிவதும் அவசியமானதாகும்; அவற்றைப் பார்ப்பதும், படிப்பதும் அவசியமானதாகும். மேலும் இவை நமக்கு முன்னால் இருக்கின்றன. எனவே எந்தச் சாக்குப்போக்கும் இல்லை. **பழைய அஹ்மதிகளுக்கு நான் இன்னொன்றையும் கூறிக் கொள்வேன். உங்களின் முன்மாதிரியைப் பார்த்து எவருக்காவது தடுமாற்றம் ஏற்படுகிறதென்றால் நீங்கள் அந்தத் தவற்றுக்கும் பாவத்திற்கும் கண்டிப்பாக பங்குதாரர் ஆவீர்கள்.** எனவே அவர்களின் முப்பாட்டனார் அஹ்மதியானார்கள். அல்லது அவர்களுக்கே சிறுவயதில் அஹ்மதிய்யத் கிடைத்துவிட்டது. அத்தகைய பழைய அஹ்மதிகள் மீது அல்லாஹ் அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் இங்கு வந்து நல்ல நிலைமை கிடைத்திருக்கிறது. அவர்கள், தாம் அஹ்மதிய்யத்தின் அருளின் கீழ்

இருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது. மேலும் அந்த அருளுக்கு நன்றிக்கடனாக அவர்கள் தமது நிலைமைகளில் அசாதாரணமான தூய மாறுதலை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் ஜமாஅத்தில் இணைந்ததன் காரணத்தினால் அந்த அருளைப் பற்றி தமது சந்ததிகளுக்கும் எடுத்துக் கூறிக் கொண்டிருக்க வேண்டும். தன்னை அஹ்மதிய்யத்துடன் தொடர்புபடுத்துகின்ற ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பு வைப்பதும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நன்றியுள்ள, கட்டுப்படுகின்ற தொடர்பை வைப்பதும் அவர் மீது கடமையாகும். ஏனெனில் அவர் பைஅத் செய்யும்போது இந்த உறுதிமொழியைத்தான் செய்தார்.

புதிதாக பைஅத் செய்தவர்கள் - அதிலும் குறிப்பாக அகப்பார்வையுடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தைப் புரிந்து முழு உறுதி நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் பைஅத்தின் உறுதிமொழியையும் அதன் நிபந்தனைகளையும் பற்றி சிந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். மேலும் பலர் எனக்கு கடிதம் எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் பிறப்பு அஹ்மதிகளாக இருக்கின்ற பலர் அல்லது எவர்களின் பெற்றோர்கள் அவர்களின் சிறுவயதில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்களோ அவர்கள் இங்கு வந்து உலக விஷயங்களில் அதிகமாக ஈடுபட்டு விட்டனர். அப்படிப்பட்டவர்கள் பொதுவாக பைஅத் நிபந்தனைகளைப் பற்றி சிந்திப்பதுமில்லை; பைஅத்தின் உடன்படிக்கையைப் புரிவதுமில்லை. அஹ்மதிய்யத்தின் காரணத்தினால் அல்லாஹ்வின் அருளை நினைவு கூறுவதுமில்லை. தற்போது MTA மூலமாக பைஅத்தின் நிகழ்ச்சிகள் எல்லா இடங்களிலும் பார்க்கப்படுகின்றன; கேட்கப்படுகின்றன. அப்படி இருந்தும் அதன் பக்கம் கவனம் செலுத்தி பைஅத்தை - பைஅத்தின் உண்மை நிலையைப் புரிவதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் முயற்சி செய்யப்படுவதில்லை.

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தன்னைப் பற்றி ஆய்வு செய்யும்போது அவர் எங்கே நிற்கிறார் என்பது அவருக்கே தெரிய வரும். அந்த ஆய்வுக்காக தற்போது நான் பைஅத்தின் ஒரு நிபந்தனையை முன்னால் வைக்கின்றேன். இதை வெறும் மேலோட்டமாக மட்டும் பார்க்காதீர்கள். மாறாக, சிந்தித்துப் பாருங்கள். மேலும் இந்த ஆய்வுக்கான விடை நேர்மறையாக இருந்தால் - அதாவது 'ஆம்' என்றிருந்தால், நீங்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவீர்கள். அத்தகையவர்கள் அல்லாஹ்வின் அருள்களை சேகரிக்கக் கூடியவர்கள் ஆவார்கள். பலவீனம் இருக்கிறதென்றால் பிறகு நீங்கள் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்யுங்கள். **பைஅத்தின் பத்தாவது நிபந்தனையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''அல்லாஹ்வுக்காக நல்ல விஷயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (அதாவது இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும்,மற்றெல்லா உலக தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.''

ஆக, இந்த சொற்கள் நம்மை ஹஸ்ரத் (அலை) அவர்களுடன் நாம் தன்னலமற்ற, எல்லையற்ற அன்பையும், தொடர்பையும் நிலைநாட்டுவதற்கான பொறுப்பை சுமத்துகின்றன. அவர்கள் நம்மிடம் என்ன உறுதிமொழி வாங்குகிறார்கள்? அல்லாஹ்வுக்காக என்னுடன் அன்பு, தொடர்பு, சகோதரத்துவம் ஆகியவற்றிற்கான உயர்ந்த தகுதியை நிலைநாட்டுங்கள். தங்களின் எல்லா நல்ல கட்டளைகளையும் ஏற்றுக் கொள்வேன் என தன்னிடம் உறுதிமொழி எடுங்கள் எனக் கூறுகிறார்கள். அதாவது எதற்காக அல்லாஹ் அன்னாரை நியமித்துள்ளானோ அந்த எல்லா விஷயங்களையும் ஏற்றுக் கொள்வேன். இஸ்லாத்தின் போதனைக்கேற்ப அவர்கள் நமக்கும் வழங்கும் எல்லா வழிகாட்டல்களையும் ஏற்றுக் கொள்வேன். பிறகு அவற்றை ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல; அவற்றின்படி செயல்படுவது மட்டுமல்ல; மாறக, மரணிக்கும் வரை அவற்றில் நிலைபெற்றிருக்க முயற்சி செய்வேன். மேலும் எந்த உடன்படிக்கை, தொடர்பு வகையிலான உறவு நிலைபெறுமோ அதன் தகுதி மிக உயர்ந்ததாக இருக்கும். அதற்கான உதாரணத்தை உலக உறவுகளில், தொடர்புகளில் காண முடியாது. இந்தத் தொடர்புக்கான உதாரணம், ஒரு மனிதன் நன்றியுணர்வுக்காக ஒருவருடன் மாசற்ற முறையில் தொடர்பு வைத்திருப்பதைப் போன்று இருக்காது. இதற்கான உதாரணம், ஒரு மனிதன் இன்னொருவருடைய பேருதவிக்கு ஈடாக தன்னை அவருடைய கையில் ஒப்படைப்பதைப் போன்று இருக்காது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உயர்ந்த

தகுதியைக் கொண்ட ஓர் அன்பாக ஒருவருடன் இருக்க முடியுமென்றால் அது அன்னார் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டருடன் இருக்க வேண்டும். எனவே இந்தத் தகுதியை நாம் நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு அன்னாருடன் எத்தைகைய தொடர்பு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக இந்த விஷயங்களின் ஒளியில் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி தாமே ஆய்வு செய்யலாம். **நமது தகுதிகள் இப்படி இருக்கின்றனவா? அல்லது உலக விவகாரங்கள் நமக்கு முன்னல் இருக்கும்போது, உலக ஆதாயங்கள் நமக்கு முன்னால் இருக்கும்போது இந்த விஷயங்களை நாம் மறந்து விடுகிறோமா? இந்த அன்பு மற்றும் கட்டுப்படுதலை உலகத் தொடர்புகள், உலக குறிக்கோள்கள் சூழ்ந்து கொள்கின்றனவா?** மார்க்கத்தைப் பற்றிய சரியான புரியும் திறனும், அறிவுத் திறனும் இருந்தால் மனிதன் மார்க்கப் பணிகளை அன்புடனும்,கலப்பற்ற முறையிலும், நன்றியுணர்வுடன்தான் செய்வார். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய பைஅத்தின் கீழ் வந்து இந்த உணர்வுகளை அதிகமாக்க வேண்டும் என நம்மிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கட்டுப்படுகின்ற, கலப்பற்ற,நன்றியுணர்வுள்ள இந்தப் பண்பு உருவாகாதவரை செய்யப்படுகின்ற அறிவுரைகளுக்கும் எந்தப் பயனும் இருக்காது. அவற்றின்படி செயல்படுவதற்கான முயற்சியும் ஏற்பட முடியாது.

எனவே அறிவுரைகளின்படி செயல்பட வேண்டுமென்றால், அன்னாரின் விஷயங்களைக் கேட்க வேண்டுமென்றால், உங்களின் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றால், உங்களின் கட்டுப்படும் தன்மை, கலப்பற்றதன்மை, நன்றியுணர்வு ஆகியவற்றின் தகுதிகளையும் அதிகமாக்குவது அவசியமானதாகும். நல்ல விஷயங்களில் கட்டுப்படுவேன் என்பதன் கருத்து, அன்பு, கலப்பற்றதன்மை ஆகியவற்றை அதன் எல்லைவரை எட்ட வைத்து முழுமையான கட்டுப்படுதல் ஆகும் என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டும். எவருக்குக் கட்டுப்படுகிறோமோ அவருடைய ஒவ்வொரு கட்டளையையும் தேடிக்கொண்டிருக்கும்போதுதான் முழுமையான கட்டுப்படுதல் உருவாக முடியும். **எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம் மீது என்ன நம்பிக்கை வைத்தார்களோ, என்ன கட்டளைகளை இட்டார்களோ அவற்றைத் தேடுவதும் அவற்றின்படி செயல்படுவதும் நமது கடமையாகும். இல்லையென்றால் நாங்கள் எல்லா வாதத்தையும் ஏற்றுக் கொள்கிறோம் என்பது வெறும் வாதமாகி விடும்.** விஷயங்கள் என்ன என்பதே தெரியாதபோது எவற்றை ஏற்றுக் கொள்வது? எனவே அஹ்மதியான பிறகு உங்கள் அறிவை அதிகப்படுத்துவதும், அல்லாஹ்வுக்காக எந்த தொடர்பை நிலைநாட்டினீர்களோ அதை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதிகமாக்குவதும், கலப்பற்ற முறையில் நமது வாழ்வை அதற்கேற்ப அமைத்துக் கொள்வதும் நிபந்தனையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கிய அறிவுரைகள், ஜமாஅத் உறுப்பினர்களிடம் வைத்திருந்த நம்பிக்கைகள் ஆகியவை அன்னாரின் பல்வேறு நூல்களிலும், வழிகாட்டல்களிலும் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை நான் உங்களுக்கு முன்னால் இப்போதுஎடுத்து வைக்கிறேன்.**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘நமது ஜமாஅத் வெறும் வாய்ப்பேச்சில் இருக்கக் கூடாது.(அதாவது வெளிப்படையில் மட்டும் இருக்கக் கூடாது; பேச்சுகள் மட்டும் இருக்கக் கூடாது.) மாறாக, பைஅத்தின் உண்மையான குறிக்கோளை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். (உண்மையான குறிக்கோள் என்ன என்பதைப் பற்றிக் கூறுகிறார்கள்.) அகத்தளவில் மாற்றத்தை உருவாக்க வேண்டும். கொள்கைகளினால் நீங்கள் அல்லாஹ்வை மகிழ்ச்சியடையச் செய்ய முடியாது. **அகத்தளவில் மாற்றம் இல்லையென்றால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை.** ஒவ்வொருவரும் தமது சுமையை சுமக்க வேண்டும். தனது உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும்.’’

எனவே செயலளவில் மாற்றம் இல்லையென்றால், செயல் அளவிலான நிலைமைகள் சிறந்தவை ஆகவில்லையென்றால் கொள்கையளவில் தன்னை சரிசெய்து கொள்வது, ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை ஏற்றுக்கொள்வது, வாக்குவாதங்களில் மற்றவர்களின் வாயை அடைப்பது ஆகியவற்றிற்கு எந்த மதிப்புமில்லை. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

**''உங்களின் நஃப்ஸின் மாறுதலுக்காக முயற்சி செய்யுங்கள்; தொழுகையில் துஆக்கள் செய்யுங்கள்.** தான தருமங்கள் மூலமாக எல்லா வகையான தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்காக *வல்லதீன ஜாஹதூ ஃபீனா* ( நம் வழிகளில் முயற்சி செய்கின்றவர்கள்)என்ற மக்களில் இணைந்து விடுங்கள். *வல்லதீன ஜாஹதூ ஃபீனா* என்பது என்ன? அல்லாஹ் கூறுகிறான்: நமது வழிகளில் முயற்சி செய்பவர்களுக்கு என்ன கிடைக்கிறது? *லனஹ்தியன்னஹூம் ஸுபுலனா* அவர்களுக்கு நாம் கண்டிப்பாக நமது வழிகளின் பக்கம் வழிகாட்டுவோம்.''

இதற்கு இன்னோரிடத்தில் அன்னார் இவ்வாறு மேலும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்:

''எல்லா அறிவுத் திறனுடனும், முழு வேகத்துடனும், முழு கலப்பற்ற முறையிலும் இறைவனைத் தேடுபவர் இறைவனின் அருள்களிலிருந்து அருளைப் பெறுவது போன்று, மிகவும் பொருட்படுத்தாத முறையில் சோம்பேறித்தனம் காட்டுபவர் சும்மாவே எப்படி பயன்பெற முடியும்?''

எனவே அவர்கள் நம்மிடம் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்; என்னைப் பின்தொடருங்கள்; பின்பற்றுவதில் என்னுடன் தொடர்பு வையுங்கள் எனக் கூறுகிறார்கள் என்றால், அல்லாஹ்வைத் தேடுவதற்கான வழிகளை நமக்குக் காட்டுவதற்காகத்தான் அவ்வாறு கூறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு அல்லாஹ்வைப் பெற முடியும்? என்பதைக் கூறுவதற்காவும், அல்லாஹ்வின் அருள்களிலிருந்து பங்குபெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவதற்காகவும் நமது தொழுகைகளை குறித்த நேரத்தில் சரியான முறையில் நிறைவேற்றுவதற்காகவும்தான் அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வின் அன்பைப் ஈர்ப்பதற்கு தான தருமங்கள் செய்வதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். ஆக, அன்னாருடன் தொடர்பு மற்றும் கட்டுப்படுதல் என்ற உறவு இறைவனோடுள்ள நமது உறவை அதிகப்படுத்துகிறது.

பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பின்னர் கிலாஃபத் அமைப்பை நம்மிடம் உருவாக்கியுள்ளான். மேலும் கிலாஃபத் அமைப்பும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைத்த பணிகளைத்தான் தொடர்ந்து செய்ய வேண்டியதிருக்கிறது. இந்த அடிப்படையில் கிலாஃபத்துடனும் கலப்பற்ற, கட்டுப்படுகின்ற தொடர்பை உருவாக்கி நாம் நமது இலக்கை நோக்கி சென்றடைய முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று உண்மையான முஸ்லிமுக்கான முன்மாதிரியாக வேண்டும்; இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்ப வேண்டும். காலத்தின் கலீஃபாவின் கையிலும் ஒவ்வோர் அஹ்மதியும் பைஅத் உடன்படிக்கை செய்கிறார். எனவே இந்த உடன்படிக்கையையும் நிறைவேற்றுவது அவசியமானதாகும். கலீஃபாவின் புறமிருந்து வரும் வழிகாட்டல்கள், அறிவுரைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின்படி செயல்படுவதன் மூலமாகவே இந்த உடன்படிக்கையை நிறைவேற்ற முடியும்.

பைஅத் செய்யும்போது ஒவ்வோர் அஹ்மதியும் பைஅத் நிபந்தனைகளின்படி செயல்படுவேன் என உறுதிமொழி எடுக்கிறார். காலத்தின் கலீஃபா அவர்கள் என்னென்ன நல்ல தீர்மானங்கள் எடுக்கிறார்களோ அவற்றிற்குக் கட்டுப்படுவேன் என உறுதிமொழி கூறுகிறார். காலத்தின் கலீஃபாவின் பணியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணிகள் மற்றும் அறிவுரைகளை, அடுத்து எடுத்து வைக்க வேண்டியதாகும். இஸ்லாத்தின் பணியை உலகின் மூலை முடுக்குகளில் பரப்ப வேண்டும். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தனது சிந்தனைக்கேற்ப தன்னை ஆயத்தம் செய்யும்போதுதான் உண்மையான கட்டுப்படுதலின் தகுதி நிலைபெற முடியும். ஜமாஅத்தின் ஒற்றுமை நிலைபெற முடியும்; அப்போதுதான் தப்லீகிற்கான களம் திறக்க முடியும். **ஒவ்வோருவரும், எனக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொடர்பு, சகோதரத்துவம், கொள்கைப்பிடிப்பு இருக்கிறது; நான் அன்னாரைப் பின்பற்றுகிறேன் எனக் கூறியவாறு தத்தமது வழியை அமைத்துக் கொண்டால் ஒருபோதும் முன்னேற்றம் கிடைக்க முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றிருக்கிறது என்பதில்தான் அதன் அழகு இருக்கிறது.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான தொண்டர்

ஆவார்கள் என்ற காரணத்தினால் ஒவ்வோர் அஹ்மதிக்கும் அன்னாருடன் இருக்கும் தொடர்பை அவர், அடுத்து கிலாஃபத்துடனும் வைப்பது அவசியமானதாகும்.

இக்காலத்தின் அஹ்மதிகள் மிகவும் நற்பேறு பெற்றவர்களாவர். அல்லாஹ் வசதி வாய்ப்புகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் வழங்கி இருக்கும்போது அவற்றை அஹ்மதிகளுக்கும் வழங்கி இருக்கிறான். மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் கண்டுபிடிப்புகளின் இந்த வசதிகளை வழங்கியுள்ளான். **தொலைக்காட்சி, வலைத்தளம், இணையம் ஆகியவற்றில் இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் இருக்கின்றன. நாம் விரும்பும் நேரத்தில் அங்கு சென்றடையலாம்.** பல்வேறு பெரிய மொழிகளில் அவற்றைப் பார்க்கவும் செய்யலாம்; கேட்கவும் செய்யலாம். அதே நேரத்தில் திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் ஆகியவற்றையே கொண்டதாக இருக்கின்ற காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களையும், அறிவுரைகளையும் கேட்கவும் செய்யலாம்; படிக்கவும் செய்யலாம். இன்று MTA மூலமாக எல்லா இடத்திலும் சென்றடைகின்ற விஷயங்கள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. **அது ஜமாஅத்தை ஒற்றுமையாக்குவதற்கு ஒரு புதிய கோணத்தை எடுத்து வைத்துள்ளது.** எனவே உங்களில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை முன்னிறுத்த வேண்டும். மேலும் அந்த ஒற்றுமையின் ஒரு பகுதியாக மாறுவதற்காக நீங்கள் MTA உடன் உங்கள் தொடர்பை ஏற்படுத்துவது அவசியமானதாகும். **குறைந்தது ஒவ்வொரு வாரமும் குத்பாவைக் கேட்பதன் பக்கம் கவனம் லுத்துங்கள். வீட்டின் ஒவ்வொரு நபரும் இந்த விஷயத்தைக் கேட்டாரா இல்லையா? என ஒவ்வொரு வீட்டிலும் ஆய்வு செய்ய வேண்டும். மனைவி கேட்கிறார். ஆனால் கணவன் கேட்கவில்லை என்றால் அப்போதும் பயனில்லை; தந்தை கேட்கிறார்; ஆனால் தாய் மற்றும் குழந்தைகள் கேட்கவில்லை என்றால் அப்போதும் எந்தப் பயனுமில்லை.** ஒற்றுமையாக்குவதற்காக அல்லாஹ் உருவாக்கியிருக்கின்ற இந்த ஏற்பாட்டினால் ஒரே நேரத்தில் உலகின் மூலைமுடுக்குகள் வரை கலீஃபாவின் ஓசை சென்றடைந்து விடுகிறது. ஒவ்வோர் அஹ்மதிக்கும் அதில் பங்கு பெறுவதற்கான தேவை இருக்கிறது. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். என்ன கூறப்படுகிறது என்பது தெரியாவிட்டால் எப்படி கட்டுப்படுவீர்கள்? கூற்றுகளைக் கேட்டால்தான் கட்டுப்படுவதற்கான தகுதியைப் பெறுவீர்கள். எனவே எந்த விஷயங்களுக்குக் கட்டுப்பட வேண்டுமோ அவற்றைத் தேடுங்கள். **ஒவ்வொரு வீடும் இதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடியதாக அல்லாஹ் ஆக்குவானாக.** மேலும் அல்லாஹ் நமது தர்பிய்யத்திற்காக என்ன வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கின்றானோ அவற்றிலிருந்து முழுமையாக பயன்பெறுபவர்களாக ஆவோமாக. அது தர்பிய்யத்திற்கு மட்டுமல்ல; மாறாக, இஸ்லாத்தின் போதனைகளை பரப்புவதிலும் இது பெரும் பங்கு வகிக்கிறது. **ஏதாவது காரணத்தினால் நேரடி ஒளிபரப்பைக் கேட்க முடியாவிட்டாலும் பதிவு செய்ததைக் கேட்க முடியும். அது வலைத்தளத்தில் இருக்கிறது. இன்னும் பல நிகழ்ச்சிகள் அதில் இருக்கின்றன. குறிப்பாக குத்பாக்கள் மற்றும் பிற சிறப்பான நிகழ்ச்சிகள்.**

நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் சிறப்பான தொடர்பை ஏற்படுத்துகின்ற அதே நேரத்தில் அன்னாருக்குப் பிறகு தொடர்கின்ற கிலாஃபத் அமைப்புடனும் உறுதியான தொடர்பு இருக்க வேண்டும். மேலும் கட்டுப்படும் முன்மாதிரியைக் காட்டுபவர்களாக இருக்க வேண்டும். இந்த தொடர்பும் கட்டுப்படுதலும்தான் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸுக்கு ஏற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதைக் கடந்து சென்றவாறு இறைவனுக்குக் கட்டுப்படுபவராகவும், அவனது திருப்தியைப் பெறுபவராகவும் ஆக்குகிறது. அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கடைசியில் ஜமாஅத்தின் கொள்கை பரப்புநரான ஜனாப் ஹாஃபிஸ் முஹம்மது இக்பால் அவர்கள் அக்டோபர் 2-ஆம் தேதி தமது 49 -ஆம் வயதில் காலமான செய்தியை தெரிவித்து அவருடைய நற்பண்புகளை எடுத்துக் கூறியவாறு அவருக்காக ஜனாஸா காயிப் தொழ வைப்பேன் எனக் குறிப்பிட்டார்கள்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**